# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : மத்திய அரசு (அ) ஒன்றிய அரசு**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## மத்திய அரசு (அ) ஒன்றிய அரசு - the union government (art-52 -151)

- ✓ மத்திய அரசு நிர்வாகம், நீதித்துறை, சட்டமன்றம் என 3 அங்கங்களை கொண்டுள்ளது. நிர்வாகத்துறை சட்டமன்ற நிகழ்வுகளுக்கு கட்டுப்பட்டது.
- ✓ PART-V 5 CHAPTER-களாக பிரிக்கப்பட்டுள்ளது.

CHAPTER – I ➔ மத்திய செயலாட்சிக்குழு - ART (52-78)

CHAPTER – II ➔ பாராளுமன்றம் - ART (79-122)

CHAPTER – III ➔ குடியரசு தலைவரின் சட்டமன்ற அதிகாரங்கள் (அ) அவசர சட்ட அதிகாரம் ART 123

CHAPTER – IV ➔ இந்திய நீதித்துறை (அ) உச்சநீதிமன்றம் - ART (79-122)

CHAPTER – V ➔ CAG - இந்திய தலைமை தணிக்கையாளர் - ART (79-122)

**CHAPTER – I** மத்திய செயலாட்சிக்குழு – **ART (52-78)**

1. குடியரசுத்தலைவர்
2. துணைகுடியரசு தலைவர்
3. பிரதமர்
4. மத்திய அமைச்சரவை
5. அட்டார்னி ஜென்ரல்

மத்திய செயலாட்சி குழுவில் இவர்கள் இடம் பெற்றுள்ளனர்

### குடியரசுத்தலைவர் Art 52- 62 (book 52-60)

- ➔ இந்திய ஒன்றியத்தின் (பெயரளவு) நிர்வாகத்தலைவர்.
- ➔ நாட்டின் முதல் குடிமகனாக உள்ளார்.
- ➔ இந்திய அரசின் தலைவராக (HEAD OF THE STATE) உள்ளார்.
- ➔ இந்திய அரசாங்கத்தின் தலைவர் (HEAD OF THE GOVERNMENT) - PM
- ➔ முப்படைகளின் தலைமை தளபதி, SUPREME COMMANDER, (ம) அரசியலமைப்பின் அதிகார வரிசையில் முதலிடத்தில் குடியரசு தலைவர் உள்ளார்.

### ART-52

- ➔ இந்திய ஒன்றியத்திற்கு (குடியரசிற்கு) ஒரு குடியரசு தலைவர் இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.

## ART-53

- இந்திய ஒன்றியத்தின் நிர்வாக (அ) செயல் அதிகாரங்கள் அனைத்தும் குடியரசுதலைவரிடம் உள்ளது.

## ART-54

- குடியரசு தலைவர் தேர்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- தேர்தலை நடத்துவது இந்திய தேர்தல் ஆணையம்
- தேர்தல் தொடர்பான வழக்குகள் (அ) பிரச்சினைகளை விசாரித்து தீர்வு வழங்குவது உச்சநீதிமன்றம்.
- நாடாளுமன்ற இரு அவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்(ELECTED MP'S), மாநில சட்டப்பேரவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்(ELECTED MLA'S) யூனியன் பிரதேச தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் (UT'S ELECTED MLA'S) ஆகியோர் அடங்கிய வாக்காளர் குழாம்(ELECTRO COLLEGE) மூலம் ஒற்றைமாற்று வாக்குமுறையில் மறைமுக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## ART-55

குடியரசுத்தலைவரை தேர்ந்தெடுக்கும் முறைகள் பற்றி குறிபிடுகிறது.

**ஒரு சட்டப்பேரவை உறுப்பினரின் (MLA) வாக்குமதிப்புபின் வருமாறு கணக்கிடப்படுகிறது.**

$$= \frac{\text{மாநிலம்(அ)யூனியன்பிரதேசமொத்தமக்கள்தொகை}}{\text{மாநிலம்(அ)}UT'S\text{மொத்ததேர்ந்தெடுக்கப்பட்ட } MLA'S} \times \frac{1}{1000}$$

EX : தமிழ்நாடு 1 MLA வாக்குமதிப்பு

$$= \frac{\text{தமிழ்நாட்டின்(1971) மொத்தமக்கள்தொகை}}{\text{தமிழ்நாட்டின்மொத்ததேர்ந்தெடுக்கப்பட்ட } MLA'S} \times \frac{1}{1000}$$

$$= \frac{41199168}{234} \times \frac{1}{1000} = 176$$

- தமிழ்நாட்டின் 1 MLA-ன் வாக்குமதிப்பு = 176
- MLA வாக்குமதிப்பு அதிகம் பெற்றுள்ள மாநிலம்

  = உத்ரபிரதேஷ் (403 MLA, 1 MLA-ன் வாக்குமதிப்பு =208)
- உத்ரபிரதேஷின் மொத்த வாக்குமதிப்பு = 403 × 208
- MLA வாக்குமதிப்பு குறைவாக பெற்றுள்ள மாநிலம்

  = சிக்கிம் (32MLA, 1 MLA-ன் வாக்குமதிப்பு = 32)

**ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் வாக்குமதிப்பு பின்வருமாறு கணக்கிடப்படுகிறது**

$$= \frac{\text{மாநிலம்(ம)யூனியன்பிரதேசமொத்தவாக்குமதிப்பு}}{\text{நாடாளுமன்ற மொத்ததேர்ந்தெடுக்கப்பட்ட } MP'S}$$

| | மொத்த MP'S | | நியமிக்கப்பட்ட MP'S | | தேர்ந்தெடுக்கப்பட்ட MP'S |
|---|---|---|---|---|---|
| ராஜ்ய சபா | 245 | - | 12 | = | 233 |
| லோக்சபா | 545 | - | 2 | = | 543 |
| TOTAL | 790 | - | 14 | = | **776** |

∴ 1 MP-ன் வாக்குமதிப்பு = $\frac{549474}{776}$ = 708

- குடியரசுத்தலைவர் வேட்பாளரை 50 வாக்காளர்கள் முன்மொழிய வேண்டும், 50 வாக்காளர்கள் வழிமொழிய வேண்டும்.
- குடியரசுத்தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் மொத்த வாக்காளர்கள் = 4896

**(TOTAL ELECTED MLA'S=4120, TOTAL ELECTED MP'S = 776)**

- குடியரசு தலைவர் வேட்பாளர் வைப்பு தொகை = ரூ. 15,000
- மொத்த வாக்குகளில் 6-ல் 1-பங்கு பெற்றால் வைப்புத்தொகை திரும்ப பெறலாம்.
- 1976 - 42- வது சட்டதிருத்தப்படி குடியரசு தலைவர் தேர்தலில் MP, MLAகளின் வாக்குமதிப்பு கணக்கிடுதல் (ம) மக்களவை , சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றிற்கு 1971 மக்கள்தொகையை 25 ஆண்டுகளுக்கு (1976-2001) பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.
- 2001-84- வது சட்டதிருத்தப்படி இது மேலும் 25 ஆண்டுகளுக்கு 2026 வரை நீட்டிக்கப்பட்டது.
- 1992-70-வது சட்டதிருத்தபடி டெல்லி புதுசேரி உள்ளிட்ட யூனியன் பிரதேச தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் குடியரசுத்தேர்தலில் பங்குபெற (வாக்களிக்க) அனுமதி வழங்கப்பட்டது.

## ART-56

- குடியரசுதலைவர் பதவிக்காலம் பற்றி குறிப்பிடுகிறது.
- பதவிக்காலம் = 5 ஆண்டுகள்
- பதவிக்காலம் முடிந்ததும் புதிய குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கும்வரை பதவியில் இருக்கலாம்
- பதவி விலகல் கடிதத்தை துணை குடியரசுதலைவரிடம் கொடுக்க வேண்டும்,துணை குடியரசு தலைவர் குடியரசுதலைவரின் பதவி விலகலை உடனடியாக மக்களவை சபாநாயகருக்கு தெரிவிப்பார்.

## ART-57

- ➔ குடியரசு தலைவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு எத்தனை முறை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

## ART-58

- ➔ குடியரசுத்தலைவர் பதவிக்கான தகுதிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- ✓ இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்
- ✓ குறைந்தபட்ச வயது = 35
- ✓ மக்களவை உறுப்பினருக்கான தகுதிகள் பெற்றிருத்தல்
- ✓ நாடாளுமன்ற (அ) சட்டமன்ற உறுப்பினராக(MP, MLA) இருக்க கூடாது.
- ✓ மத்திய அரசு மாநில அரசு (ம) உள்ளாட்சி அரசுகளில் ஆதாயம் தரும் இரட்டை பதவி வகிக்கக்கூடாது.
- ✓ குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றிருக்க கூடாது.
- ✓ மனநிலை பாதித்தவராக இருத்தல் கூடாது.
- ✓ நொடிந்தவராக இருத்தல் கூடாது.

| | குறைந்தபட்ச வயது |
|---|---|
| குடியரசு தலைவர் | 35 |
| துணைகுடியரசு தலைவர் | 35 |
| ஆளுனர் | 35 |
| ராஜய சபா உறுப்பினர் | 30 |
| சட்டமேலவை உறுப்பனர் | 30 |
| பிரதமர் | 25 |
| முதலமைச்சர் | 25 |
| லோக்சபா உறுப்பினர் | 25 |
| சட்டப்பேரவை உறுப்பினர் | 25 |
| லோக்பால் தலைவர் (ம) உறுப்பினர்கள் | 45 |

## ART-59

- ➔ CONDITIONS OF THE OFFICE OF PRESIDENT.

- குடியரசுதலைவர் பதவிக்கான வரைமுறைகள் (அ) வரையறைகள் பற்றி குறிப்பிடுகிறது.

## ART-60

- குடியரசுதலைவரின் பதவிப்பிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- பதவிப்பிரமாணம் செய்து வைப்பவர் = உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

## ART-61

- குடியரசு தலைவரை குற்ற விசாரனை மூலம் பதவி விலகல் பற்றி குறிப்பிடுகிறது. (IMPEACHMENT OF THE PRESIDENT)
- குடியரசு தலைவர் அரசியல் சட்டத்தை மீறியதற்காக பின்வரும் விதிமுறைகளை பின்பற்றி பதவி நீக்கம் செய்யப்படுவர்
- குடியரசுதலைவர் மீதான குற்றச்சாட்டு தீர்மானம் நாடாளுமன்ற இரு அவைகளில் எந்த அவையிலும் முதலில் கொண்டு வரலாம்.
- குற்றச்சாட்டு தீர்மானம் அறிமுகப்படுத்தப்படும் அவையில் 4-ல் 1-பங்கு உறுப்பினர் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு 14 நாட்களுக்குள் மற்றொரு அவைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- குற்றச்சாட்டு தீர்மான அறிவிப்பு நகல் 14 நாட்களுக்கு முன் குடியரசு தலைவருக்கு வழங்க வேண்டும்.
- நாடாளுமன்ற இரு அவைகளிலும் 2/3 சிறப்பு பெருன்பான்மை தீர்மானம் மூலம் பதவி நீக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

## ART-62

- குடியரசு தலைவர் இறப்பு (அ) பதவி விலகல் (அ) பதவி நீக்கம் ஆகிய காரணங்களால் ஏற்படும் காலிபணியிடத்தை நிரப்புவது பற்றி குறிப்பிடுகிறது.
- குடியரசுதலைவர் காலிபணியிடம் ஏற்பட்ட 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்தி நிரப்ப வேண்டும்.

## குடியரசுதலைவரின்அதிகாரங்கள்

### நிர்வாக (அ) செயல்அதிகாரம்

- இந்திய ஒன்றியத்தின் நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் (பெயரளவில்) குடியரசு தலைவரிடம் உள்ளது.
- இந்திய அரசின் தலைவராக உள்ளார் (HEAD OF THE STATE)
- முப்படைகளின் தலைமை தளபதி (SUPREME COMMANDER)
- முப்படை தளபதிகள் (GENERAL, ADMIRAL, AIR CHIEF MARSHAL)

- மாநில ஆளுனர்கள், யூனியன் பிரதேச துணைநிலை ஆளுனர்கள், பிரதமர், பிரதமர் பரிந்துரையின்படி மத்திய அமைச்சர்கள், UPSC தலைவர் (ம) உறுப்பினர்கள், CAG, வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்கள் ஆகியோரை நியமிக்கிறார்.
- தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம், தேசிய பழங்குடியினர் ஆணையம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், ஆட்சிமொழி ஆணையம், சிறுபான்மையினர் மொழிக்கான தனி அலுவலர், மாநிலங்களுக்கிடையேயான குழு ஆகியவற்றை அமைக்கிறார்.
- அரசியலமைப்பின்படி அதிகாரம் பெற்ற உயர் அலுவலர்களை நாடாளுமன்றத்தின் பரிந்துரைப்படி பதவிநீக்கம் செய்கிறார்.
- **ART-77**-ன் படி இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் அலுவல்கள் (அ) நடவடிக்கைகள் அனைத்தும் இவரது பெயிரல் நடைபெறுகிறது. (அலுவல்கள் அனைத்தும் இவரது ஒப்புதல் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வரும்.)
- இந்தியாவின் எந்த பகுதியையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்
- போர் பிரகடனம் செய்ய (அ) திரும்ப பெற அதிகாரம் பெற்றுள்ளார்.
- **ART-299**-ன்படி இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் சர்வதேச ஒப்பதங்கள், உடன்படிக்கைகள், குடியரசு தலைவர் ஒப்புதல் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வரும்.

## சட்டமுறை (அ) சட்டமன்றஅதிகாரங்கள்

- **ART-79**-ன்படி நாடாளுமன்றத்தின் ஒரு பகுதியே குடியரசு தலைவர்
- **ART 80(3)**-ன்படி மாநிலங்கள் அவைக்கு கலை, இலக்கியம், அறிவியல், சமூகசேவை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களை நியமிக்கிறார்.
- **ART-331**-ன்படி மக்களவையில் ஆங்கிலோ இந்தியருக்கான பிரதிநிதித்துவம் இல்லாதபோது குடியரசுதலைவர் 2 ஆங்கிலோ இந்தியர் உறுப்பினரை நியமிக்கிறார்.
- **ART-85**-ன்படி நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்ட, முடிவுக்கு கொண்டுவர (ம) மக்களவையை கலைக்க அதிகாரம் பெற்றுள்ளார்
- நாடாளுமன்ற கூட்டத்தொடரை குறைந்தபட்சம் ஆண்டிற்கு 2 முறையாவது கூட்டும் பொறுப்பை பெற்றவர் குடியரசுதலைவர்.
- ஒரு கூட்டத்தொடருக்கும் மற்றொரு கூட்டதொடருக்கும் இடையே 6 மாதத்திற்கு மேல் இடைவெளி இருக்க கூடாது.
- **ART-86**-ன்படி ஆண்டின் முதல் நாடாளுமன்ற கூட்டத்தொடரையும் பொது தேர்தல் முடிந்த முதல் நாடாளுமன்ற கூட்டத்தொரையும் துவக்கிவைத்து உரையாற்றுகிறார்.
- நாடாளுமன்ற அவைகளுக்கு செய்தி (ம) தகவல் தகவல் அனுப்ப உரிமை பெற்றுள்ளார்.
- **ART-87**-ன்படி நாடாளுமன்றத்தில் சிறப்புரை நிகழ்த்த அதிகாரம் பெற்றுள்ளார்.
- மக்களவை சபாநாயகர், துணைசபாநாயகர் பதவிகள் காலியாக இருக்கும்போது மக்களவை உறுப்பினர் ஒருவரை தற்காலிக சபாநாயகராக நியமிப்பார்.

- ART-102-ன்படி தேர்தல் ஆணையத்தை கலந்தாலோசித்த பின் நாடாளுமன்ற உறுப்பினர் தகுதி இழப்பை தீர்மானிப்பார்.
- ART-108-ன்படி பாராளுமன்ற கூட்டுகூட்டத்தை கூட்டும் பொறுப்பை பெற்றுள்ளார்.
- ART-111-ன்படி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க (அ) நிறுத்தி வைக்க (அ) திருப்பி அனுப்ப அதிகாரம் பெற்றுள்ளார், ஆனால் பண மசோதா (அ) அரசியலமைப்பு சட்டதிருத்த மசோதாக்களை திருப்பி அனுப்ப இயலாது, கட்டாயம் ஒப்புதல் அளிக்க இயலாது.
- ART-123-ன்படி நாடாளுமன்றம் கூடாத காலங்களில் அவசர சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். அவசர சட்டத்திற்கு பாராளுமன்றம் கூடிய 6 வாரத்திற்குள் ஒப்புதல் பெற வேண்டும். குடியரசு தலைவர் அவசர சட்டத்தை எந்த நேரத்திலும் திரும்ப பெற்றுக்கொள்ளலாம்.

## நிதி அதிகாரங்கள்-FINANCIAL

- ART-109-ன்படி பண மசோதா குடியரசு தலைவர் ஒப்புதல் பெற்ற பின்னரே நாடாளுமன்றத்தில் மக்களவையில் அறிமுகப்படுத்த முடியும்.
- ART-267-ன்படி இந்திய அரசின் எதிர்கால பாரா செலவினையை நிர்வகிக்கும் பொறுப்பை பெற்றுள்ளார். எதிர்பாரா செலவுகளுக்கு இந்நிதியிலிருந்து முன்பணம் வழங்குவார்.இந்நிதியில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.
- ART-112-ன்படி இவரது ஒப்புதல் பெற்ற பின்னரே நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்வார்.
- ART-280-ன்படி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதிக்குழுவை அமைத்து நிதிக்குழு தலைவர் (ம) உறுப்பினர்களை நியமிக்கிறார். (மத்திய மாநில அரசுகளுக்கிடையே நிதியை பகிரந்தளிக்க)

## நீதிஅதிகாரங்கள்-JUDICIAL

- உச்சநீதிமன்ற (ம) உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கிறார்.
- ART-72-ன்படி குற்றவாளிகளுக்கு தண்டனையை குறைக்க (அ) நிறுத்தி வைக்க (அ) ரத்து செய்ய அதிகாரம் பெற்றுள்ளார். (குடியரசு தலைவரின் பொது மன்னிப்பு அதிகாரம் - ART-72)
- மரண தண்டனையும் ரத்து செய்யலாம்.
- ராணுவதீர்ப்பாயம் (அ) நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனைகளையும் ரத்து செய்யலாம்.
- ராணுவ நீதிமன்றமத்தால் வழங்கப்பட்ட தண்டனைகள் தொடர்பான மேல்முறையீட்டை விசாரிக்கவோ (அ) ராணுவ நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடவோ உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை.
- ART-143-ன் படி உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனை கோரும் அதிகாரம் பெற்றுள்ளார்.

## நெருக்கடி நிலை (அ) அவசரநிலை பிரகடனங்கள்

- குடியரசு தலைவர் இந்த அதிகாரத்தை பின்பற்றி 3 வகையான நெருக்கடிநிலை பிரகடனங்களை பிறப்பிக்ககும் அதிகாரம் பெற்றுள்ளார்.

### 1 தேசியநெருக்கடி = ART-352

- போர், அயல்நாட்டு ஆக்கிரமிப்பு (EXTERNAL AGGRESSION) , ஆயுத கிளர்ச்சி (ARMED REBELLION) ஆகிய காரணங்களுக்காக நாடு முழுவதுமோ (அ) நாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்கோ தேசிய நெருக்கடி அறிவிக்க அதிகாரம் பெற்றுள்ளார்.
- 1978-44-வது சட்டதிருத்தபடி உள்நாட்டு குழப்பம் என்ற (INTERAL DISTURBANCE) வார்த்தைக்கு பதிலாக ஆயுத கிளர்ச்சி என்ற வார்த்தை சேர்க்கப்பட்டது.
- தேசிய நெருக்கடி மேற்கண்ட நிகழ்வுகள் நடைபெறுவதற்கு முன்னரே முன்னெச்சரிக்கையாகவும் குடியரசுத்தலைவர் அறிவிக்கலாம்.
- 1978-44-வது சட்டதிருத்தப்படி மத்திய அமைச்சரவையின் ஆலோசகபடியே தேசிய நெருக்கடி அறிவிக்க முடியும் என திருத்தப்பட்டது.
- 1975-38-வது சட்டதிருத்தப்படி தேசிய நெருக்கடி (ம) மாநில நெருக்கடிகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர இயலாது என்றும் குடியரசுத்தலைவர் ஒரே சமயத்தில் வெவ்வேறு காரணங்களுக்காகவும் தேசிய நெருக்கடி அறிவிக்கலாம் என்றும் திருத்தப்பட்டது.
- தேசிய நெருக்கடி அறிவிக்கப்பட்ட 1 மாதத்திற்குள் பாராளுமன்றத்தில் 2/3 சிறப்பு பெருன்பாண்மை ஆதரவுடன் ஒப்புதல் பெற வேண்டும்.
- 1976-42-வது சட்டதிருத்தபடி தேசிய நெருக்கடி ஒப்புதல் கால அளவு சாதாரனப்பெருன்பான்மையுடன் 2 மாதம் என நீட்டிக்கப்பட்டது. 1976-க்கு முன் சாதாரனப்பெருன்பான்மையுடன் 1 மாதம் இருந்தது.
- 1978-44-வது சட்டதிருத்தப்படி தேசிய நெருக்கடி ஒப்புதல் பெறும் கால அளவு சிறப்பு பெருன்பான்மையுடன் 1 மாதம் என திருத்தப்பட்டது. நெருக்கடி நிலை பிரகடனங்களை தவறாக பயன்படுத்துவதிலிருந்து பாதுகாப்பு வழங்கப்பட்டது.
- தேசிய நெருக்கடியை ஒரே சமயத்தில் 6 மாதத்திற்கு மட்டுமே அறிவிக்க முடியும்.ஒவ்வொரு 6 மாதத்திற்கு 1 முறை பாராளுமன்றம் ஒப்புதல் பெற்று எவ்வளவு காலத்திற்கும் நீட்டிக்கலாம்.
- J&K மாநிலம் அம்மாநில சட்டமன்ற ஒப்புதல் அளித்தாலே தேசிய நெருக்கடி அறிவிக்க முடியும்.
- 1978-ல் தேசிய நெருக்கடி பற்றி ஆராய மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசாங்கம் J.C.ஷா தலைமையில் குழுவை அமைத்தது.
- இதுவரை இந்தியாவில் 3 முறை தேசிய நெருக்கடி அறிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **1962-1968** | அயல்நாட்டு ஆக்கிரமிப்பு -EXTERNAL AGRESSION & WAR<br>1962 – இந்திய சீனப்போர்<br>1965 -இந்திய பாகிஸ்தான் போர் |
| **1971 – 1977** | அயல்நாட்டுஆக்கிரமிப்பு & போர்<br>1971- இந்தியா பாகிஸ்தான் போர் |
| **1975-1977** | உள்நாட்டு குழப்பம் - INTERNAL DISTURBANCE |

**தேசிய நெருக்கடியால் ஏற்படும் விளைவுகள்**

1. மத்திய-மாநில உறவுகளில் ஏற்படும் பாதிப்பு
2. மக்களவை (ம) சட்டப்பேரவையின் பதவிக்காலத்தில் ஏற்படும் விளைவுகள்
3. அடிப்படை உரிமைகளில் ஏற்படும் விளைவுகள்

**1. மத்திய மாநில உறவுகளில் ஏற்படும் விளைவுகள்**

- தேசிய நெருக்கடி அமலில் இருக்கும்போது மாநில அரசுகளின் நிர்வாக அதிகாரங்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென குடியரசுத்தலைவர் மாநில அரசுகளுக்கு ஆணையிடலாம்.
- தேசிய நெருக்கடியின்போது அனைத்து விவகாரங்களிலும் மாநில அரசுகளுக்கு குடியரசுத்தலைவர் ஆணையிடலாம்.
- தேசிய நெருக்கடியின்போது மாநில சட்டப்பேரவைகள் கலைக்கப்படாது. ஆனால் மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட சட்டமுறை (அ) சட்டமன்ற உறவுகள் நிறுத்தி வைக்கப்படும்.
- தேசிய நெருக்கடியின்போது மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே நிதி ஆதாரங்களை பகிர்ந்தளிப்பது (வருவாய் பங்கீடு) பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் குடியரசுத்தலைவர் மாற்றி அமைக்கலாம்.

**2. மக்களவை (ம) சட்டப்பேரவையின் பதவிக்காலத்தில் ஏற்படும் விளைவுகள்**

- தேசிய நெருக்கடியின்போது மக்களவையின் பதவிக்காலத்தை 1 ஆண்டுவரை (5+1=6) நீட்டிக்கலாம்.
- தேசிய நெருக்கடி அமலில் இருக்கும்போது மாநில சட்டப்பேரவைகளின் பதவிக்காலத்தை பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் 1 ஆண்டுவரை (5+1= 6) நீட்டிக்கலாம்.

## 3. அடிப்படை உரிமைகளில் ஏற்படும் விளைவுகள்

**ART-358**

- தேசிய நெருக்கடி அறிவிக்கப்பட்டால் ART-19 தானே செயலிழந்துவிடும் (அ) முடங்கிவிடும். ஆயுத கிளர்ச்சி காரணத்திற்காக தேசிய நெருக்கடி அறிவிக்கப்பட்டால் ART-19 செயலிழக்காது.
- தேசிய நெருக்கடி அமலில் இருக்கும்போது ART-19 நடைமுறைப்படுத்தக்கோரி குடிமக்கள் நீதிமன்றத்தை நாட இயலாது.

**ART-359**

- தேசிய நெருக்கடி அறிவிக்கப்பட்டால் குடியரசுத்தலைவர் ART-20 (ம) ART-21-யை தவிர மற்ற எந்த அடிப்படை உரிமையையும் நிறுத்தி வைக்கலாம்.

**2 மாநிலநெருக்கடி (அ) குடியரசுத்தலைவர் ஆட்சி = ART-356, ART-365**

**ART-355**

- மாநிலங்களில் அயல்நாட்டு ஆக்கிரமிப்பு (அ) அயல்நாட்டு தாக்குதல் (ம) ஆயுத கிளர்ச்சிகளிலிருந்து பாதுகாப்பது மத்திய அரசின் கடமை.மேலும் மாநிலங்களில் அரசியலமைப்பு சட்டப்படி முறையாக ஆட்சி நடைபெறுவதை உறுதி செய்வதும் மத்திய அரசின் கடமை.

**ART-356**

- மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து அரசியலமைப்பு இயங்குநிலை செயலற்று போகும்போது ஆளுனர் அறிக்கும்அறிக்கையின்படி (அ) மாநில நிர்வாகத்தில் மத்திய அரசிற்கு (குடியரசுத்தலைவருக்கு) திருப்தி இல்லாதபோது குடியரசுத்தலைவர் மாநில நெருக்கடி அறிவிப்பார்.

**ART-365**

- மத்திய அரசின் கட்டளைகளையோ (அ) உத்தரவுகளையோ மாநில அரசு ஏற்க மறுத்தால் அம்மாநிலத்தில் அரசியலமைப்பு சட்டப்படி அரசாங்கம் நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக கருதி குடியரசுத்தலைவர், குடியரசுத்தலைவர் ஆட்சியை அறிவிப்பார்.

✓ மாநில நெருக்கடி அறிவிக்கப்பட்ட 2 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

✓ மாநில நெருக்கடி ஒரே சமயத்தில் 6 மாததிற்கு மட்டுமே அறிவிக்க முடியும்.

✓ ஒவ்வொரு 6 மாதத்திற்கு 1 முறை பாராளுமன்றொப்புதலுடன் அதிகபட்சம் 3 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம்.

- ✓ ஆனால் அம்மாநிலத்தில் ஏற்கனவே மாநில நெருக்கடி இருத்தல் (அ) இந்திய தேர்தல் ஆணையம் அம்மாநிலத்தில் தேர்தல் நடத்தும் சூழ்நிலை இல்லை என அறிக்கை அளித்தல் ஆகிய காரணங்களுக்காக மேலும் 3 ஆண்டுகள்வரை நீட்டிக்கலாம்.
- ✓ பஞ்சாபில் 5 ஆண்டுகள் (15.7.1987-1992) மாநில நெருக்கடி நிலை அமலில் இருந்தது.
- ✓ மாநில நெருக்கடிநிலையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம்.
- ✓ மாநில நெருக்கடி இந்தியாவில் 120முறைக்குமேல் பயன்படுத்தப்பட்டது,
- ✓ மாநில நெருக்கடி முதன்முதலில் அமல்படுத்திய மாநிலம் = பஞ்சாப் (1951)
- ✓ மாநில நெருக்கடி நீண்டகாலம் அமல்படுத்திய மாநிலம் = பஞ்சாப் (5yrs)
- ✓ மாநில நெருக்கடி அதிகமுறை பயன்படுத்திய மாநிலம் = KL, UP (9 TIMES)
- ✓ தமிழ்நாட்டில் மாநில நெருக்கடி 4 முறை பயன்படுத்தப்பட்டது, அவை

| | | |
|---|---|---|
| 30-1-1976 | 30-6-1977 | DMKகலைந்தது. |
| 17-2-1980 | 9-6-1980 | MGR-ADMK கலைந்தது |
| 30-1-1988 | 27-1-1989 | ஜானகி ராமச்சந்திரன் ADMK கலைந்தது |
| 30-1-1991 | 24-6-1991 | DMK கலைந்தது. |

**மாநில நெருக்கடியின் விளைவுகள்**

- ❖ குடியரசுத்தலைவர் சட்டமன்றத்தை (சட்டப்பேரவையே) கலைக்கலாம் (அ) முடக்கிவைக்கலாம்.
- ❖ மாநிலத்தின் நிர்வாக அதிகாரங்களை குடியரசுத்தலைவர் ஏற்றுக்கொள்வார்.
- ❖ குடிரசுத்தலைவர் நெருக்கடி நிலை பிரகடனத்திற்கு தேவையான சட்டவரைமுறைகளை ஏற்படுத்துவார்.
- ❖ மாநிலத்தின் சட்டம் இயற்றும் அதிகாரத்தை பாராளுமன்றம் குடியரசுத்தலைவருக்கு வழங்கும்.இவ்வதிகாரத்தை குடியரசுத்தலைவர் தான் விரும்பும் நபர்களுக்கு ( ஆளுனர், தலைமை செயலாளர்) அளிக்க அதிகாரமுண்டு.
- ❖ குடியரசுத்தலைவர் உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவோ (அ) மாநில நீதிமன்றங்கள் தொடர்பான மாற்றங்களையோ மேற்கொள்ள இயலாது.

## 3 நிதி நெருக்கடி ART-360

- ➔ நாடு முழுவதுமோ (அ) நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில்லோ நிதிநிலை (அ) பொருளாதார நிலை சீர்குலையும்போது குடியரசுத்தலைவர் நிதி நெருக்கடி அறிவிப்பார்.
- ➔ நிதி நெருக்கடி அறிவிக்கப்பட்ட 2 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.ஒருமுறை ஒப்புதல் பெற்றால் மீண்டும் நிதி நெருக்கடியை குடியரசுத்தலைவர் திரும்ப பெறும்வரை அமலில் இருக்கும்.

- ➔ J&K-ல் மட்டும் நிதிநெருக்கடிநிலை அறிவிக்கமுடியாது.
- ➔ இந்தியாவில் இதுவரை நிதி நெருக்கடி நிலை பயன்படுத்தப்படவில்லை.

## நிதி நெருக்கடியின் விளைவுகள்

- ➔ குடியரசுத்தலைவர் மத்திய அரசு ஊழியர்கள், மாநில அரசு ஊழியர்கள், உச்ச (ம) உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரின் சம்பளம் (ம) படிகளை குறைக்கலாம் (அ) நிறுத்தி வைக்கலாம்.
- ➔ பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பணம் (ம) நிதி மசோதாக்களை தனது பரிசீலனைக்கு அனுப்பி வைக்குமாறு ஆனையிடலாம். பரிசீலனைக்குப்பின் குடியரசுத்தலைவர் இப்பண (ம) நிதி மசோதாக்களை நிறுத்திவைக்கலாம்.
- ➔ எந்த சூழ்நிலையிலும் குடியரசுத்தலைவரின் சம்பளம் (ம) படிகளை நிறுத்தி வைக்க இயலாது.

## துணைக்குடியரசுத்தலைவர் ART-63-72

### ART-63

- ➔ குடியரசுத்தலைவருக்கு அடுத்த நிலையில் துணைக்குடியரசுத் தலைவர் இருக்க வேண்டும்.

### ART-64

- ➔ துணைக்குடியரசுத்தலைவர் பதவி வழியே மாநிலங்கள் அவைக்கு (EX OFFICIO CHAIRMAN) தலைவராக செயல்படுவார்.

### ART-65

- ➔ துணைக்குடியரசுத்தலைவரின் பணிகள் (ம) துணைக்குடியரசுத்தலைவர், குடியரசுத்தலைவரின் பணிகளை மேற்கொள்ளுதல் பற்றி குறிப்பிடுகிறது.
- ➔ குடியரசுத்தலைவர் உடல்நலக்குறைவு, அயல்நாடு பயணம் ஆகிய காரணங்களால் அவர் தனது பணியை ஆற்ற இயலாத போது குடியரசுத்தலைவரின் பணிகளை துணைக்குடியரசுத்தலைவர் மேற்கொள்வார்.
- ➔ குடியரசுத்தலைவரின் இறப்பு (அ) பதவிவிலகல் (அ) பதவி நீக்கம் ஆகிய காரணங்களால் குடியரசுத்தலைவர் காலிப்பணியிடம் ஏற்பட்டால் அதிகபட்சம் 6 மாதங்கள் வரை துணைக்குடியரசுத்தலைவர் குடியரசுத்தலைவரின் பொறுப்பை வகிப்பார்.
- ➔ குடியரசுத்தலைவர் பொறுப்பை வகிக்கும்போது குடியரசுத்தலைவருக்கான சம்பளம், படிகள், அதிகாரங்களை பெறுவார். மற்ற சமயங்களில் மாநிலங்கள் அவை தலைவருக்கான சம்பளம், படிகள், சலுகைகளை பெறுவார்.

- குடியரசுத்தலைவர் தலைவர் பொறுப்பை வகிக்கும்போது மாநிலங்கள் அவை தலைவராக செயல்பட இயலாது.

**ART-66**

- துணைக்குடியரசு தலைவரின் தேர்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- தேர்தலை நடத்துவது இந்திய தேர்தல் ஆணையம்.
- நாடாளுமன்ற இரு அவை உறுப்பினர்கள் கொண்ட (நியமன உறுப்பினர்கள் உள்பட) வாக்காளர் குழாம்(ELECTRO COLLGE) மூலம் ஒற்றை மாற்று வாக்குமுறையில் மறைமுக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**தகுதிகள்**

- குறைந்தபட்ச வயது = 35
- ராஜ்யசபா உறுப்பினர்களுக்கான தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.
- குடியரசுத்தலைவருக்கான தகுதிகளை பெற்றிருத்தல்.
- சட்டமன்ற (அ) நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க கூடாது.
- மத்திய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அரசுகளில் ஆதாயம் தரும் பதவி வகிக்ககூடாது.

**ART-67**

- துணைக்குடியரசுத்தலைவரின் பதவிக்காலம் பற்றி குறிப்பிடுகிறது.
- பதவிக்காலம் = 5 ஆண்டுகள்
- பதவிக்காலம் முடிந்ததும் புதிய துணைக்குடியரசுத்தலைவர் பதவி ஏற்கும் வரை பதவியில் இருக்கலாம்.
- பதவிவிலகல் கடிதத்தை குடியரசுத்தலைவரிடம் அளிக்க வேண்டும்.

**பதவிநீக்கம்**

- துணைக்குடியரசுத்தலைவர் மீதான குற்றச்சாட்டு தீர்மானம் முதலில் ராஜசபாவில்(மாநிலங்கள்அவை) மட்டுமே கொண்டுவரவேண்டும்.
- குற்றச்சாட்டு தீர்மான முன் அறிவிப்பு 14 நாட்களுக்கு முன் அவருக்கு வழங்க வேண்டும்.
- ராஜசபாவில் குற்றச்சாட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு லோக்சபாவிற்கு 14 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.
- நாடாளுமன்ற இரு அவைகளிலும் 2/3 பங்கு சிறப்பு பெருண்பான்மை தீர்மானம் மூலம் பதவி நீக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பதவிநீக்கம் செய்யப்படுவார்.

**ART-68**

- துணைக்குடியரசுத்தலைவர் பதவிக்காலம் முடியும் முன்பே தேர்தல் நடத்த வேண்டும்.

**ART-69**

- துணைக்குடியரசுத்தலைவர் பதவிப்பிரமாணம் பற்றி குறிபிடுகிறது.
- பதவிப்பிரமாணம் செய்துவைப்பவர் குடியரசுதலைவர் (அ) அவரால் நியமிக்கப்பட்ட நபர்.

**ART-70**

- மற்ற தற்செயல் நேர்வுகளில் துணைக்குடியரசுத்தலைவர் குடியரசுத் தலைவரின் பணிகளை மேற்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-71**

- குடியரசுத்தலைவர் (ம) துணைக்குடியரசுத்தலைவர் தேர்தல் தொடர்பான பிரச்சினைகளை (அ) சிக்கல்களை (உச்சநீதிமன்றத்தால்) தீர்ப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-72**

- குடியரசுத்தலைவரின் பொதுமன்னிப்பு அதிகாரம் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-73**

- மத்திய செயல்(அ)நிர்வாக அதிகாரங்களை நீட்டித்தல் (அ) அதிகரித்தல் (EXTENT OF EXECUTIVE POWER OF THE UNION)

## மத்தியஅமைச்சரவை (அ) அமைச்சர்கள்குழு

**COUNCIL OF MINISTERS - ART 74, ART-75**

- மத்திய அமைச்சர்கள் குழு என்பது கேபினெட் அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், இணை அமைச்சர்கள் ஆகியோரை உள்ளடக்கியது.
- கேபினெட் என்பது கேபினெட் அமைச்சர்களை மட்டுமே உள்ளடக்கியது.

## ART-74

- ➔ குடியரசுத்தலைவருக்கு உதவ, ஆலோசனை வழங்க பிரதமர் தலைமையிலான அமைச்சரவை இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது.
- ➔ 1976-42-வது சட்டதிருத்தப்படி குடியரசுத்தலைவர் மத்திய அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுப்பட்டவர் என திருத்தப்பட்டது.
- ➔ 1978-44-வது சட்டதிருத்தப்படி குடியரசுத்தலைவர் மத்திய அமைச்சரவையின் ஆலோசனைகளை மறுபரிசீலனைக்கு ஒருமுறை திருப்பி அனுப்பலாம், ஆனால் மறுபரிசீலனைக்கு பின் குடியரசுத்தலைவர் மத்திய அமைச்சரவையின் ஆலோசனைபடியே செயல்பட வேண்டும் என திருத்தப்பட்டது.
- ➔ 2003-91-வது சட்டதிரத்தப்படி பிரதமர் உட்பட மத்திய அமைச்சரவை எண்ணிக்கை மக்களவை உறுப்பினர் எண்ணிக்கையில் 15%-க்கு மிக்ககூடாது. என திருத்தப்பட்டது.
- ➔ மத்திய அமைச்சர்களின் 3 தகுதிகள் பற்றிஅரசியலமைப்பில் குறிப்பிடபடவில்லை.
- ➔ நடைமுறையில் 3 தகுதிகளால் அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

1. **<u>கேபினெட் (அ) மூத்த அமைச்சர்கள் - CABINET MINISTERS</u>**
   - ➔ பல்வேறு துறைகளுக்கு தலைமை பொறுப்பு வகிப்பவர்
   - ➔ அரசின் கொள்கைகளையும் முடிவுகளையும் வகுக்கின்றனர்.
   - ➔ கேபினெட் கூட்டத்தில் கலந்துகொள்ள தகுதியுடையவர்கள்.
2. **<u>ராஜாங்க (அ) தனிபொறுப்பு அமைச்சர்கள்-MINISTER OF STATE</u>**
   - ➔ பல்வேறு இலாக்காக்கள் (அ) துறைகளுக்கு தனிபொறுப்பு வகிப்பர்
   - ➔ சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டால் மட்டுமே கேபினெட் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.
3. **<u>இணை (அ) துணை அமைச்சர்கள்</u>**
   - ➔ கேபினெட் (அ) ராஜாங்க அமைச்சர்களுக்கு உதவியாக பணியாற்றுவர்.
   - ➔ கேபினெட் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாது.

## கேபினெட் - CABINET

- ❖ கேபினெட் அமைச்சர்களை மட்டும் கொண்ட ஒரு தனிபட்ட அமைப்பு
- ❖ நாட்டில் மிக அதிகாரம் பெற்ற அமைப்பு
- ❖ குடியரசுத்தலைவர் நெருக்கடி நிலை பிரகடனங்களை பிறப்பிக்க, அவசர சட்டம் பிறப்பிக்க, வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்களை நியமிக்க பரிந்துரை செய்கிறது.
- ❖ மத்திய நிர்வாகத்தின் மையமாக விளங்குகிறது.
- ❖ அரசின் கொள்கைகளையும், முக்கிய முடிவுகளையும் வகுக்கிறது.
- ❖ நாடாளுமன்ற கூட்டத்தொடர் கூடும்தேதி, முடிவுபெறும் தேதிகளை தீர்மானிக்கிறது.
- ❖ பண மசோதாவின் பிறப்பிடமாக திகழ்கிறது.
- ❖ கேபினெட் ஆலோசனைப்படியே நிதி அமைச்சர் பட்ஜெட் தாக்கல் செய்வார்.

- அரசியலமைப்பு சட்டதிருத்தம் கொண்டுவர முக்கிய பங்கு வகிக்கிறது.
- சர்வதேச ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் அங்கீகரிக்கிறது.
- அரசின் வெளிநாட்டு கொள்கைகளை தீர்மானிக்கிறது.
- புதிய மாநிலம் (அ) யூனியன் பிரதேசம் (UT) உருவாக்க முக்கிந பங்கு வகிக்கிறது.
- அனைத்து அமைச்சர்களின் கருத்துக்களையும் ஒருங்கிணைத்து தேசிய கொள்கைகளை வகுக்கிறது.
- பிரதமர் (ம) 2 (அ) 3 கேபினெட் அமைச்சர்களை உள்ளடக்கிய அமைப்பு
  = கிச்சன் கேபினெட்
- இது கேபினெட்டை விட அதிகாரம் பெற்ற அமைப்பு.

## பிரதமர் (ம) அமைச்சர்கள் நியமனம்ART-75

- மக்களவை பெரும்பாண்மை கட்சி தலைவரை பிரதமராக குடியரசு தலைவர் நியமிப்பார்.
- எந்த கட்சிக்கும் பெரும்பாண்மை இல்லாதபோது குடியரசுத்தலைவர் மக்களவையில் அதிக உறுப்பினர் கொண்ட கட்சியின் தலைவரை ஆட்சியமைக்க கோருவார், ஆனால் அவர், குடியரசுதலைவர் நிர்ணயிக்கும் காலத்திற்குள் (அதிகபட்சம் 1 மாதம்) மக்களவையில் பெரும்பாண்மை நிரூபிக்க வேண்டும்.
- பிரதமர் பரிந்துரைப்படி மத்திய அமைச்சர்களை குடியரசுதலைவர் நியமிப்பார்.
- நாடாளுமன்றத்திற்கு வெளியே இருந்தும் (நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத நபரையும்) பிரதமர் (அ) அமைச்சர்கள் நியமிக்கப்படலாம். ஆனால் பதவியேற்ற 6 மாதத்திற்குள் இரு அவைகளிலும் ஏதாவது ஒரு அவையில் உறுப்பினராக வேண்டும்.
- மத்திய அமைச்சரவை குடியரசுத்தலைவருக்கு தனி பொறுப்படையது. (INDIVIDUAL RESPONSIBILITY)
- மத்திய அமைச்சரவை நாடாளுமன்றத்திற்கு (மக்களவைக்கு) கூட்டு (அ) ஒட்டுமொத்த பொறுப்புடையது. - COLLECTIVE RESPONSIBILITY
- பிரதமர் (ம) அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைப்பவர்
  = குடியரசு தலைவர்
- ART-75-ல் பிரதமர் (ம) மத்திய அமைச்சர்களின் சம்பளம், படிகள், மத்திய அமைச்சர்களின் கடமைகள் அதிகாரங்கள், பொறுப்புகள் ஆகியவை பற்றியும் குறிப்பிடுகிறது.
- பிரதமர் (ம) மத்திய அமைச்சர்களின் சம்பளம் (ம) படிகளை நிர்ணயிப்பது
  = நாடாளுமன்றம்

## ATTORNEY GENERAL OF INDIA - அட்டார்னி ஜெனரல் - இந்திய அரசு தலைமை வழக்கறிஞர்

**ART-76**

- நாட்டின் மிக உயர்ந்த சட்ட அலுவலராக உள்ளார்
- இவரை நியமிப்பவர், பதவிநீக்கம் செய்பவர், சம்பளம் (ம) படிகளை தீர்மானிப்பவர் - குடியரசு தலைவர்

- தகுதிகள் = உச்சநீதிமன்ற நீதிபதிக்கான தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.
- சம்பளம் (ம) பதவிக்காலம் பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடபடவில்லை. இதனை தீர்மானிப்பவர் - குடியரசு தலைவர்
- எவ்வித முன்னறிவிப்புமின்றி குடியரசு தலைவரால் பதவிநீக்கம் செய்யப்படுவார்.
- இவர் பாராளுமன்ற உறுப்பினருக்கான சிறப்பு உரிமைகள் (ம) பாதுகாப்புகளை பெறுவார்.
- இவர் பாராளுமன்ற இரு அவை நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டு பேசலாம், கருத்து தெரிவிக்கலாம், ஆனால் வாக்களிக்க இயலாது.
- நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் அரசின் சாரபில் வாதடலாம் (ம) நீதிமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ளலாம்.
- மத்திய அரசு (ம) குடியரசு தலைவருக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவார்.
- இவர் பதவியில் இருக்கும்போது மற்ற எந்த அமைப்புகளிலோ (அ) நிறுவனங்களிலோ பொறுப்பு வகிக்க இயலாது.
- இவருக்கு உதவியாக சொலிசிடர் ஜெனரல், கூடுதல் சொலிசிடர் ஜெனரல் என இருவர் இருப்பர் (இவர்களை பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடபடவில்லை)

**ART-77**

- இந்திய அரசாங்கத்தின் அலுவல்கள் (அ) பணிகள் மேற்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.

**பிரதமரின் கடமைகள் (அ) பணிகள் (ம) அதிகாரங்கள்**

**ART-78**

- இந்திய அரசாங்கத்தின் தலைவர் - HEAD OF THE GOVERNMENT
- உண்மையான நிர்வாக அதிகாரங்களை (உண்மையான நிர்வாக தலைவர்) பெற்றுள்ளார்.
- மத்திய அமைச்சர்களை நியமிக்க குடியரசு தலைவருக்கு பரிந்துரைப்பார்.
- மத்திய அமைச்சரவை எண்ணிக்கையை தீர்மானிப்பவர்
- மத்திய அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்வார்.
- மத்திய அமைச்சரவையின் தலைவராக செயல்படுவார்.
- மத்திய அமைச்சரவை கூட்டதேதி (ம) கருதுபொருள்(அஜந்தா) தீர்மானிப்பார்.
- மாநிலங்களுக்கிடையேயான குழு, தேசிய வளர்ச்சி குழு(NDC), தேசிய ஒருங்கிணைப்பு குழு, மத்திய திட்டக்குழு(NITI AYOK) ஆகியவற்றின் தலைவராக செயல்படுவார்.
- அரசியலமைப்பு (ம) அரசியலமைப்பு சாராத அமைப்புகளின் தலைவர் (ம) உறுப்பினர் நியமனத்தில் குடியரசுதலைவருக்கு ஆலோசனை வழங்குவார்.
- மக்களவையில் பெரும்பாண்மை இல்லாதபோது மக்களவையை கலைக்க குடியரசு தலைவருக்கு பரிந்துரைப்பார்.
- மத்திய அரசாங்கத்தின் (அ) அமைச்சரவையின் தலைவராக செயல்பட்டு பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுவார்.

- பாராளுமன்றத்தில் அரசின் கொள்கைகளையும், அறிவிப்புகளையும், திட்டங்களையும் அறிவிப்பார்.
- மத்திய அரசின் முதன்மை கருத்தாளராக (CHIEF SPOKE'S MAN) செயல்படுவார்.
- குடியரசு தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இடையே தகவல் தொடர்பு பாலமாக செயல்படுவார்.
- அமைச்சரவையின் முடிவுகளை குடியரசு தலைவருக்கு தெரிவிப்பார்.
- குடியரசுதலைவர் கூறும் அமைச்சரவை, நிர்வாகம், மசோதாக்கள் தொடர்பான தகவல்களை வழங்குவார்.
- அமைச்சரவை கூட்டம் கூடாதபோது 2 (அ) 3 மூத்த அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுப்பார்.

## பாராளுமன்றம் - (ART - 79 TO ART - 122)

### ART-79

- பாராளுமன்றம் பற்றி குறிப்பிடுகிறது.
- பாராளுமன்றம் என்பது குடியரசு தலைவர், மாநிலங்களவை (ம) மக்களவையை உள்ளடக்கியது.

### மாநிலங்களவை (அ) ராஜ்யசபா (அ) மத்திய மேலவை

- 1952-ல் ஏற்படுத்தப்பட்டது.
- 1954-ல் மாநிலங்களவையின் பெயர் ராஜ்யசபா என்றும், மக்களவையின் பெயர் லோக்சபா என்றும் மாற்றப்பட்டது.

### ART-80

- ராஜ்யசபா பற்றியும் ராஜ்யசபா உறுப்பினர் எண்ணிக்கையும் பற்றியும் குறிப்பிடுகிறது.

### ART-80(3)

- ராஜ்யசபாவில் கலை, இலக்கியம், அறிவியல், சமூகசேவை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களை குடியரசு தலைவரால் நியமிக்கப்படுவார்.

OTHERS

- ராஜ்யசபாவின் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை = **250**
- மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை = **238**
- குடியரசுதலைவரால் நியமிக்கப்படும் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை = **12**
- தற்போதைய மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை = **245**
- மாநிலங்கள் (ம) UT'S-லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை = **233** (STATE-229, UT-4(DELHI-3 + P.CHRY -1))
- தற்போது குடியரசு தலைவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை =**12**
- மாநிலங்களவை உறுப்பினர்கள் , மாநிலங்கள் (ம) UT'S சட்டப்பேரவை உறுப்பினர்களால் ஒற்றைமாற்று வாக்குமுறையில் மறைமுக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- **1956 - 7-** சட்டதிருத்தப்படி UT'S சட்டபேரவை உறுப்பினர்களும் ராஜ்ய சபாவிற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வகை செய்யப்பட்டது.
- ராஜ்யசபாவில் அதிக உறுப்பினர்களை கொண்ட மாநிலம் = **U.P. (31)**
- **T.N**. மாநிலங்களவை உறுப்பினர் அவை எண்ணிக்கை = **18**

**ராஜ்ய சபாவின் சிறப்பு அதிகாரங்கள்**

- **ART-67**-ன் படி துணைகுடியரசுதலைவர் மீதான குற்றச்சசாட்டு தீர்மானம் முதலில் ராஜ்யசபாவில் மட்டுமே கொண்டுவர முடியும்.
- **Art-249**-ன்படி மாநிலப்பட்டியலில் உள்ள துறையை மாநில அவையில் 2/3 பங்கு சிறப்பு பெரும்பாண்மை தீர்மானம் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என கருதி தீர்மானம் நிறைவேற்றினால் அம்மாநிலப்படியலில் உள்ள துறைமீது பாராளுமன்றம் சட்டம் இயற்றும் அதிகாரம் பெறும்.
- **Art-312**-ன்படி ராஜ்யசபாவில் 2/3 பங்கு சிறப்பு பெரும்பாண்மை தீர்மானம் மூலம் தீர்மானம் நிறைவேற்றி புதிய அகில இந்திய பணிகளை உருவாக்கலாம்.

## மக்களவை (அ) லோக்சபா (அ) மத்திய கீழவை

அவை

## ART-81

- மக்களவை (ம) மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை பற்றி குறிப்பிடுகிறது.
- மக்களவையின் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை = 552
- மாநிலங்கள் (ம) UT'S -லிருந்து தேர்ந்தெடுக்கப்படும் அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கை = 550
- மாநிலங்களிலிருந்து மட்டும் = 530 (MAXIMUM)
- UT'S-லிருந்து மட்டும் = 20 (MAXIMUM)

- குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் அதிகபட்ச ஆங்கிலோ-இந்திய உறுப்பினர் எண்ணிக்கை = 2 (ART-331) (AT PRESENT)
- மக்களவையின் தற்போதைய உறுப்பினர் எண்ணிக்கை = 545
- மாநிலங்கள் (ம) UT'S லிருந்து (ELECTED MP'S) = 543 (AT PRESENT)
- மாநிலத்திலிருந்து மட்டும் = 530 (AT PRESENT)
- UT'S - லிருந்து மட்டும் = 13 ( 7 MP'S OUT OF 20)
- இந்தியாவிலுள்ள மக்களவை தொகுதிகள் = 543
- பொதுதொகுதிகள் = 412
- SC/ST தனி தொகுதிகள் = 131 ( SC= 84 + SC=47)
- இந்தியாவில் அதிக மக்களவை உறுப்பினர் கொண்ட மாநிலம் = U.P. (80)
- மக்களவையில் SC உறுப்பினர்களை அதிகம் கொண்ட மாநிலம் = U.P.(17)
- மக்களவையில் ST உறுப்பினர்களை அதிகம் கொண்ட மாநிலம் = M.H. (6) ?
- T.N.-மக்களவை உறுப்பினர்கள் = 39 (GEN=32 + SC=7 + ST-0)

**ART-331**

**<u>நாடாளுமன்ற அவைகள் (ம) உறுப்பினர்களின் பதவிக்காலம்</u>**

- மக்களவையில் ஆங்கிலோ இந்தியருக்கான பிரதிநிதித்துவம் இல்லாதபோது குடியரசுதலைவர் 2 A-I-யை உறுப்பினராக நியமிப்பார்.

**<u>மக்களவையின் சிறப்பு அதிகாரங்கள்</u>**

- மத்திய அரசாங்கத்தின்மீது (அ) அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் மக்களவையில் மட்டுமே கொண்டுவர முடியும்.
- பண (ம) நிதி மசோதாக்கள் முதலில் மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்தமுடியும்.**(ART-109)**
- மத்திய அரசாங்கம் கொண்டு வரும் மாநில கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பு மக்களவையில் மட்டுமே நடத்த முடியும்.
- மாநில கோரிக்கைகள் முதலில் மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்.
- 3 பட்டியல் மீதும் சட்டம் இயற்றும் அதிகாரம் பெறும்.
- மாநிலங்களவையின் அதிகாரத்தை மீறியும் செயல்படலாம்.
- மத்தியில் அதிகாரம் பெற்ற அமைப்பு.
- இவை தவிர (மாநிலவை,மக்களவை சிறப்பு அதிகாரம் தவிர) மற்ற அனைத்திலும் இரு அவைகளும் சமமான அதிகாரத்தை பெற்றிருக்கும்.

**ART-83**

**<u>மாநிலங்கள் அவை (அ) ராஜ்யசபா</u>**

- ராஜ்யசபாவின் பதவிக்காலம் <u>நிரந்தரமானது</u>.(கலைக்க இயலாது)
- உறுப்பினர்களின் பதவிக்காலம் = 6 ஆண்டுகள்

**பாராளுமன்ற உறுப்பினர் தகுதிகள் ART - 84**

- 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை 1/3 பங்கு உறுப்பினர்கள் பதவி விலகுவர்.

**மக்களவை (அ) லோக் சபா**

- மக்களவை (ம) மக்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் = 5 ஆண்டுகள்
- பதவிக்காலம் முடியும் முன்பே ATR-85-ன்படி குடியரசுதலைவரால் மக்களவை கலைக்கப்படலாம்.
- 1976-42-சட்டதிருத்தபடி மக்களவை பதவிக்காலம் 5- 6 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது (இந்திராகாந்தி)
- 1978-44-வது சட்டதிருத்தபடி மீண்டும் 6- 5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. (மொரார்ஜி தேசாய்)
- மிக நீண்ட காலம் செயல்பட்ட மக்களவை தொகுதி
  = 5 - வது மக்களவை (1971-77)

- மக்களவை தொகுதிகள் இதுவரை 4 முறை மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. அவை 1952, 1962, 1972, 2002.
- கடைசியாக 2003-87-வது சட்டதிருத்தப்படி 2001 மக்கள்தொகையில் அடிப்படையில் சீரமைக்கப்பட்டது. ஆனால் மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை 1971 மக்கள்தொகை அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மாநிலங்களவை உறுப்பினர்**

- குறைந்தபட்ச வயது = 30
- அம்மாநிலத்தில் ஏதாவது ஒரு நாடாளுமன்ற தொகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும்.
- குற்ற வழக்குகளில் 2 ஆண்டுகளுக்குமேல் தண்டனை பெற்றிருக்க கூடாது.
- மக்களவை உறுப்பினராக இருக்க கூடாது.
- மற்ற தகுதிகளை அவ்வப்போது நாடாளுமன்றம் நிர்ணயிக்கும்.

**மக்களவை உறுப்பினர்**

- குறைந்தபட்ச வயது = 25
- நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும்.
- குற்ற வழக்குகளில் 2 ஆண்டுகளுக்குமேல் தண்டனை பெற்றிருக்க கூடாது.
- மாநிலங்களவையில் உறுப்பினராக இருக்க கூடாது.
- மற்ற தகுதிகளை அவ்வப்போது நாடாளுமன்றம் நிர்ணயிக்கும்.

**ART-82**

- ஒவ்வொரு மக்கள்தொகை கணக்கெடுப்பிற்கும் பின்வரும். நாடாளுமன்றம் உறுப்பினர் எண்ணிக்கை மறு நேரமைவு செய்வது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-85**

- நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்டுதல், தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தல், நாடாளுமன்ற கூட்டத்தொடரை முடிவுக்கு கொண்டுவருதல், மக்களவையை கலைத்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- குடியரசுதலைவர் குறைந்தபட்சம் ஆண்டிற்கு 2 முறையாவது நாடாளுமன்றத்தை கூட்டும் பொறுப்பை பெற்றுள்ளார்.
- ஒரு கூட்டத்தொடருக்கும் மற்றொரு கூட்டத்தொடருக்கும் இடையே 6 மாதத்திற்கு மேல் இடைவெளி இருக்க கூடாது.
- நடைமுறையில் பாராளுமன்றம் ஆண்டிற்கு 3 முறை கூட்டப்படுகிறது.

1. **பட்ஜெட் கூட்டத்தொடர்**
    - FEB - MAY = 4 MONTHS
    - மிக நீண்ட கூட்டத்தொடர்
    - ஆண்டின் முதல் கூட்டத்தொடர்
2. **பருவகால (அ) மழைக்கால கூட்டத்தொடர்(MANSOON SESSION)**
    - JULY-SEP = 3 MONTHS
3. **குளிர்கால கூட்டத்தொடர் WINTER SESSION**
    - NOV-DEC = 2 MONTHS
    - மிக குறுகிய கூட்டதொடர்

**நாடாளுமன்ற கூட்டத்தொடரை 3 வழிகளில் முடிவுக்கு கொண்டு வரலாம்.**

1. அவையை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தல் (அதிகாரம் - சபாநாயகர்)
2. மக்களவையை கலைத்தல் (அதிகாரம் - குடியரசுதலைவர்)
3. கூட்டத்தொடரை முடித்து ஆணையிடுதல் (அதிகாரம் - குடியரசுதலைவர்)

- பொதுதேர்தலுக்கு முந்தைய கடைசி நாடாளுமன்றம் கூட்டம்
  = நொன்டி வாத்து கூட்டம் (LAME DUCK SESSION)

**ART-86**

- குடியரசுதலைவர் பாராளுமன்றத்தில் உறையாற்றும் உரிமை (ம) பாராளுமன்ற அவைகளுக்கு செய்தி, தகவல் அனுப்பும் உரிமை பற்றி குறிப்பிடுகிறது.
- ஆண்டின் முதல் நாடாளுமன்ற கூட்டத்தொடர் (ம) பொது தேர்தல் முடிந்த முதல் நாடாளுமன்ற கூட்டத்தொடரை துவக்கி வைத்து உரை ஆற்றுகிறார்.

**ART-87**

- குடியரசுதலைவர் பாராளுமன்றத்தில் சிறப்புரை நிகழ்த்துதல் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-88**

- அட்டார்னி ஜெனரல் (தலைமை வழக்கறிஞர்) (ம) அமைச்சர்களுக்கு பாராளுமன்றத்தில் உள்ள உரிமைகள் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-89**

- ராஜ்யசபா தலைவர் (ம) துணைத்தலைவர் பற்றி குறிப்பிடுகிறது.
- ராஜ்யசபா தலைவர் = துணைக்குடியரசு தலைவர் (EXOFFICIO CHAIRMAN)(**ART-64)**

**ART-89(2)**

- ராஜ்யசபா துணைத்தலைவர் தேர்தல் பற்றி குறிப்பிடுகிறது.
- ராஜ்யசபா உறுப்பினர்களில் ஒருவர் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவார்.

**ART-90**

- ராஜ்யசபா துணைத்தலைவர் பதவி நீக்கம் பற்றி குறிப்பிடுகிறது.
- ராஜ்யசபாவில் பெரும்பாண்மை தீர்மானம் நிறைவேற்றி பதவிநீக்கம் செய்யப்படுவார்.
- பதவிநீக்கத் தீர்மானம் முன் அறிவிப்பு 14 நாள்களுக்குமுன் அவருக்கு வழங்க வேண்டும்.

**ART-91**

- ராஜ்யசபா தலைவரின் கடமைகளை, துணைத்தலைவர் (அ) பிற உறுப்பினர் செயல்படுத்த உள்ள அதிகாரம் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-92**

- ராஜ்யசபா தலைவரை (அ) துணைத்தலைவரை பதவிநீக்கதீர்மானம் கொண்டு வரும்போது அவர் அந்த அவைக்கு தலைமை ஏற்க கூடாது என குறிப்பிடுகிறது.

**ART-93**

- மக்களவை சபாநாயகர் (ம) துணை சபாநாயகர் பற்றி குறிப்பிடுகிறது. (LOKSABHA SPEAKER & DEPUTY SPEAKER)
- இந்தியாவில் மான்டெகு-செம்ஸ்போர்டு சட்டப்படி 1921-ல் சபாநாயகர் (ம) துணைசபாநாயகர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.
- அவையை திறம்பட நடத்தும் பொறுப்பை பெற்றவர் = சபாநாயகர்
- அவையில் அறிமுகப்படுத்தும் மசோதாவை சாதாரண மசோதாவா (அ) பண மசோதாவா என தீர்மானிப்பவர் = சபாநாயகர்

- பாராளுமன்ற கூட்டுக்கூட்டத்திற்கு தலைமை ஏற்பவர் = சபாநாயகர்
- மக்களவை வாக்கெடுப்பில் சமநிலை ஏற்படும்போது மட்டும் சபாநாயகர் வாக்களிக்கும் (முடிவு செய் வாக்கு-CASTING VOTE) அதிகாரத்தை பெற்றுள்ளார்.
- மக்களவை கலைக்கப்படும்போது சபாநாயகர் பதவி காலியாகாது, புதிய மக்களவையின் முதல் கூட்டம் கூடும்வரை பதவியில் இருப்பார்.
- சபாநாயகர் இல்லாதபோது , துணைசபாநாயகர் சபாநாயகருக்கான அனைத்து அதிகாரங்களையும் பெற்று அவையை தலைமையேற்று நடத்துவார்.

**ART-94**

- சபாநாயகர் (ம) துணைசபாநாயகர் பதவி நீக்கம் பற்றி குறிப்பிடுகிறது.
- மக்களவையில் பெரும்பாண்மை தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்யப்படுவர்
- பதவிநீக்க முன்னறிவிப்பு 14 நாள்களுக்குமுன் அவருக்கு வழங்க வேண்டும்.

**ART-96**

- சபாநாயகர் (அ) துணைசபாநாயகரை பதவிநீக்க தீர்மானம் கொண்டுவரும்போது அவர் அந்த அவைக்கு தலைமை ஏற்க கூடாது.

**ART-97**

- பாராளுமன்ற அதிகாரிகளான ராஜ்யசபா தலைவர், துணைத்தலைவர், லோக்சபா சபாநாயகர், துணைசபாநாகர் ஆகியோரின் சம்பளம் படிகள் (ம) சலுகைகள் பற்றி குறிப்பிடுகிறது. (அட்டவணை - II)

**ART-98**

- பாராளுமன்ற செயலகம் (SECRETARIATE) பற்றி குறிப்பிடுகிறது.
- இரு அவைகளுக்கும் தனிதனி செயலகம் செயல்படுகிறது.

**ART-99**

- பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிப்பிரமாணம் பற்றி குறிப்பிடுகிறது.
- பதவிப்பிரமாணம் செய்து வைப்பவர் = குடியரசுத்தலைவர் (அ) அவரால் நியமிக்கப்பட்ட நபர் (அட்டவணை = III)
- நடைமுறையில், மக்களவை உறுப்பினருக்கு சபாநாயகரும், ராஜ்யசபா உறுப்பினர்களுக்கு ராஜ்யசபாதலைவரும் நியமிக்கின்றனர்.

**ART-100**

- அவைகளில் (சபாநாயகர், ராஜ்யசபாதலைவர்) வாக்களித்தல், பாராளுமன்ற அவைகளின் குறைவெண் (அ) கோரம்(QUORUM-ART-100cc) பற்றி குறிப்பிடுகிறது.

- ❖ அவையை நடத்துவதற்கு தேவையான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை
  = கோரம்
- ❖ குறைந்தபட்சம் 1/10 பங்கு உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
- ❖ ராஜ்யசபாவின் கோரம் = 1/10 பங்கு உறுப்பினர்கள் (அ) 25 உறுப்பினர்கள்
- ❖ லோக்சபாவின் கோரம் = 1/10 பங்கு உறுப்பினர்கள் (அ) 55 உறுப்பினர்கள்

**ART-101**

- ❖ பாராளுமன்ற உறுப்பினர் காலிப்பணியிடம் பற்றி குறிப்பிடுகிறது.
- ❖ பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி தொடர்ந்து 60 நாள்களுக்கு மேல் சபைக்கு வராமல் இருந்தால் அவ்வுறுப்பினர் பணியிடம் காலியானதாக கருதப்படும்.

**ART-102**

- ❖ பாராளுமன்ற உறுப்பினர் தகுதியிழப்பு பற்றி குறிப்பிடுகிறது.
- ❖ தேர்தல் ஆணையத்தை கலந்தாலோசித்துபின் பாராளுமன்ற உறுப்பினர் தகுதியிழப்பை தீர்மானிப்பவர் = குடியரசுதலைவர்
- ❖ கட்சிதாவல் தடைசட்டத்தின்படி பாராளுமன்ற உறுப்பினர் தகுதியிழப்பை தீர்மானிப்பவர் = சபாநாயகர்.

**ART-103**

- ❖ பாராளுமன்ற உறுப்பினர் தகுதியிழப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு முடிவெடுத்தல் (அ) தீர்வுகாணுதல் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-104**

- ❖ ART-99-ன்படி பதவிப்பிரமாணம் (அ) உறுதிமொழி எடுப்பதற்கு முன்போ (அ) தகுதியற்றவராக இருக்கம்போதே அவையில் அமர்தல் (அ) வாக்கு அளித்தால் அபராதம் விதித்தல் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-105**

- ❖ பாராளுமன்ற அவைகளுக்கும் உறுப்பினர்களுக்கும் (ம) பாராளுமன்ற குழுக்களுக்கும் உள்ள அதிகாரங்கள், மதிப்பு உரிமைகள், காப்புரிமைகள் (ம) சிறப்புரிமைகள் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-106**

- ❖ பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பளம் (ம) படிகள், சலுகைகள் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-107**

- பாராளுமன்ற அவைகளில் மசோதர்க்கள் அறிமுகப்படுத்துதல் பற்றி குறிப்பிடுகிறது.
- ஒரு மசோதா 3 வாசிப்புகளுடன் 5 நிலைகளை கடந்து குடியரசு தலைவர் சட்டமாகும்.

1. முதல் வாசிப்பு = மசோதாவை அறிமுகப்படுத்தி அதன் நோக்கம், நன்மைகளை எடுத்து உரைத்தல்
2. இரண்டாம் வாசிப்பு = விவாதம் நடத்தி திருத்தம் செய்தல்
3. மூன்றாம் வாசிப்பு = வாக்கெடுப்பு நடத்துதல்
4. நான்காம் வாசிப்பு= மற்றொரு அவையில் நிறைவேற்றப்படுதல்
5. ஐந்தாம் வாசிப்பு = குடியரசுதலைவர் ஒப்புதல்

பாராளுமன்றத்தில் 4 வகையான மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது

1. சாதாரண மசோதா
2. **நிதிமசோதா - ART-117**
3. பணமசோதா- **ART - 110**
4. அரசியலமைப்பு சட்டதிருத்த மசோதா (மாநிலத்தில் இது இல்லை)

**ART-108**

- பாராளுமன்றம் கூட்டுக்கூட்டம் பற்றி குறிப்பிடுகிறது.
- மசோதா ஒரு அவையில் நிறைவேற்றப்பட்டு, மற்றொரு அவையில் நிராகரிக்கப்படுதல், மசோதா மீது திருத்தம் மேற்கொள்வதில் இரு அவைகளுக்கும் ஒன்றுபடாத (அ) ஒத்திபோகாத நிலை, மசோதா ஒரு அவையில் நிறைவேற்றப்பட்டு மற்றொரு அவையில் 6 மாதத்திற்குமேல் நிலுவையில் இருத்தல் ஆகிய காரணங்களுக்காக கூட்டக்கூட்டம் கூட்டப்படும்.
- கூட்டக்கூட்டத்தை கூட்டுபவர் = குடியரசுதலைவர்
- கூட்டகூட்டத்திற்கு தலைமை ஏற்பவர் = மக்களவை சபாநாயகர்
- சபாநாயகர் இல்லாதபோது துணைசபாநாயகர் பதவி ஏற்பார்
- சபாநாயகரும், துணைசபாநாயகரும் இல்லாதபோது ராஜ்யசபா துணைத்தலைவர் பதவி ஏற்பார் (ராஜ்ய சபாதலைவர் தலைமை ஏற்க முடியாது,ஏனெனில் பாராளுமன்ற உறுப்பினராக அவர் இருக்க வேண்டும்.)
- பண மசோதாவிற்கும், அரசியலமைப்பு சட்டதிருத்த மசோதாவிற்கும் கூட்டுக்கூட்டம் கூட்ட இயலாது.
- கூட்டுக்கூட்டத்தில் மசோதாமீது எவ்வித பரிந்துரையும் மேற்கொள்ள இயலாது.
- மாநிலத்தில் கூட்டுகூட்டம் கிடையாது (**ART-174**)

இதுவரை 3 முறை கூட்டுக்கூட்டம் கூட்டப்படுள்ளது.

1. வரதட்சணை தடுப்பு சட்ட மசோதா = 1961-MAY 6 TO 1961-MAY-9

   வரதட்சணை தடுப்பு சட்டம்= **1961-** இச்சட்டம் **1986**-ல் திருத்தப்பட்டது.

2. வங்கி பணியாளர் தேர்வாணைய நீக்க மசோதா = **1978-5-16**
3. தீவிரவாத தடுப்பு சட்டம் (POTA ACT) = **2002-5-26**

இக்கூட்டங்கள் அனைத்தும் வெற்றி பெற்றது.

**ART-109**

- பண மசோதாவை முதலில் மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்.

**ART-110** **பண மசோதா**

- வரவு செலவு தொடர்புடையது.
- நிதிமசோதாவின் ஒரு பகுதியே பண மசோதா
- வரிவிதித்தல், நடைமுறையில் உள்ள வரியை நீக்குதல், கடன்வாங்குதல், நிதிஒதுக்கீடு பெறுதல், சில்லரை செலவினம், மத்திய-மாநில அரசு கணக்குதனிக்கை, இந்திய பொது கணக்கு ஆகியவை தொடர்பானது பணமசோதா.
- இவை தவிர மற்ற அனைத்து வரவுகளையும் செலவுகளையும் உள்ளடக்கிய மசோதா = நிதிமசோதா
- பண மசோதாவை தீர்மானிப்பவர் = மக்களவை சபாநாயகர்
- பண மசோதா தோன்றும் இடம் = கேபினெட்
- பணமசோதாவிற்கு ராஜ்ய சபா 14 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும் (அ) திருப்பி அனுப்ப வேண்டும். இல்லையெனில் அம்மசோதா தானாக நிறைவேறியதாக கருதப்படும்.
- குடியரசுதலைவர் பணமசோதாவை திருப்பி அனுப்ப இயலாது, கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும். (ART-111)

**ART-111**

- குடியரசுதலைவர் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தல், நிறுத்தி வைத்தல், திருப்பி அனுப்புதல் பற்றி குறிப்படுகிறது.
- குடியரசுதலைவர் பணமசோதா, அரசியலமைப்பு சட்டதிருத்த மசோதாக்களை திருப்பி அனுப்ப இயலாது, கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.
- மற்ற மசோதாக்களை ஒருமுறை மட்டுமே திருப்பி அனுப்ப இயலும், மறுமுறை கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**ART-112** **ANNUAL FINANCIAL STATEMENT**

- ஆண்டுநிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) பற்றி குறிப்பிடுகிறது.

- பட்ஜெட் என்ற சொல் அரசியலமைப்பில் பயன்படுத்தப்படவில்லை.
- FEB-கடைசிநாள் மத்திய நிதி அமைச்சரால் பட்ஜெட் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.
- 2000 வரை மாலை 5 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டது, 2001 முதல் காலை 11 மணிக்கு தாக்கல் செய்யப்படுகிறது. சிதம்பரம் காலை 11 மணி என மாற்றினார்.

**ART-113**

- பாராளுமன்றத்தில் மதிப்பீடுகள் பாற்றிய பாராளுமன்ற நெறிமுறை பற்றி கு.

**ART-114**

- நிதி ஒதுக்கீடு (ம) பங்கீடு மசோதாக்கல் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-115**

- துணை, கூடுதல் மிகை மானியங்கள் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-116**

- முன்னளிப்பு மானியம்(VOTE ON ACCOUNT), முன்பற்றுத்தொகை(VOTE ON CREDIT), தனிமானியங்கள் (அ) ஒதுக்கீடுகள் (EXCEPTIONAL GRANTS) பற்றி குறிப்பிடுகிறது.

**ART-117**

- நிதி மசோதாக்கள் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-118**

- பாராளுமன்ற நெறிமுறை விதிகள் (RULE OF PROCEDURES) பற்றி குறிப்பிடுகிறது.

**ART-119**

- நாடாளுமன்றத்தில் நிதி அலுவல்கள் பற்றிய நெறிமுறைகளை சட்டத்தால் ஒழுங்குபடுத்துதல் பற்றி குறிப்பிடுகிறது.

**ART-120**

- பாராளுமன்றத்தின் அலுவல் (அ) ஆட்சிமொழி, பாராளுமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- பாராளுமன்றத்தின் அலுவல் (அ) ஆட்சி மொழி = HINDHI, ENGLISH

- ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்கள், அவையில் - தங்கள் தாய்மொழியில் பேசணுமதிக்கிறது.
- ஆங்கிலம், இந்தியை தவிர உறுப்பினர்கள் தாய்மொழில் பேசினால், பேசும் தகவல்களை ஆங்கிலம்(அ) இந்தி வடிவில் சபாநாயகரிடம் முன் அணுமதி பெற்று அளிக்க வேண்டும்.
- ஆட்சி மொழிகள் சட்டம் = **1963** -**OFFICIAL LANGUAGE ACT**

**ART-121**

- பாராளுமன்றத்தில் விவாத முறைகள், விவாதத்தின் மீதான நெறிமுறைகள்

**ART-122**

- பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் (அ) செயல்பாடுகள் குறித்து நீதிமன்றம் விசாரிக்க இயலாது என குறிப்பிடுகிறது.

## பாராளுமன்றத்தின் சிறப்பு அதிகாரங்கள்

- ART-122 –ன்படி இதன் செயல்முறைகள் (அ) நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றம் விசாரிக்க இயலாது.
- குடியரசுதலைவர் (ம) துணைகுடியரசுதலைவர் தேர்தலுகளில் பங்கு பெறுகிறது.
- பட்ஜெட், நெருக்கடிநிலை பிரகடனங்கள், அவசர சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.
- துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது.
- சீரியமுறையில் ஆட்சி நடத்த சட்டம் இயற்றுகிறது.
- அரசியலமைப்பை திருத்தும் அதிகாரம் பெற்றுள்ளது.
- அமைச்சர்களின் செயல்பாட்டினை கண்கானிக்கிறது.
- குடியரசுதலைவர், துணைகுடியரசுதலைவர், உச்சநீதிமன்ற-உயர்நீதிமன்ற நீதிபதிகள், CAG, UPSC & SPSC தலைவர் (ம) உறுப்பினர்கள் , இந்திய தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்கள், அரசியலமைப்பின்படி அதிகாரம் பெற்ற உயர் அலுவலர்கள் ஆகியோர்மீது பதவி நீக்கம் பற்றி தீர்மானம் நிறைவேற்றுகிறது.
- நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதற்கு 40 நாட்களுக்கு முன்னரும் முடிந்த 40 நாட்கள் வரையும் பாராளுமன்ற உறுப்பினர்களை குற்ற வழக்கு தவிர மற்ற வழக்குகளில் கைது செய்ய இயலாது.

### கேள்வி நேரம் - QUESTION HOUR

- பாராளுமன்றத்தில் சபை துவங்கிய முதல் 1 மணி நேரம் கேள்வி நேரம்.(11-12)
- கேள்வி நேரத்தில் கேட்கப்படும் கேள்விகளை உறுப்பினர்கள் முன்னரே சபாநாயகரிடம் அளிக்க வேண்டும்.

கேள்வி நேரத்தில் 3 வகையான கேள்விகள் கேட்கப்படுகிறது.

1. நட்சத்திர குறியிட்ட கேள்விகள் - STARRED QUESTION

   உறுப்பினர் கேட்க விரும்பும் கேள்வியில் நட்சத்திரக்குறி இடம்பெறிருக்கும். இக்கேள்விக்கு அமைச்சர் வாய்மொழியாக பதில் அளிப்பார்.இக்கேள்விகள் மீது உறுப்பினர் துணைக்கேள்விகள்(SUPPLEMENTARY QST) எழுப்பலாம்.
2. நட்சத்திரக்குறி இடப்படாத கேள்வி - UNSTARRED QUEST

   இக்கேள்விக்கு அமைச்சர் எழுத்து மூலம் பதில் அளிப்பார், துணை கேள்வி எழுப்ப இயலாது.
3. குறித்தகால அவகாச கேள்வி - SHOOT NOTICE QUESTIONS

   உறுப்பினர் கேட்க விரும்பும் கேள்விகளை 10 நாட்களுக்குமுன் சபாநாயகரிடம் அளிக்க வேண்டும். இக்கேள்விக்கு அமைச்சர் வாய்வழியாக பதிலளிப்பார். துணைக்கேள்வி எழுப்ப இயலாது.

## பூஜ்ய நேரம்

- கேள்வி நேரத்திற்கு அடுத்து வரும் 1 மணிநேரம் (**12PM-1PM**)
- **1962**-ல் ஜ.நேரு அறிமுகப்படுத்தினார். (IND-ல் மட்டும் உள்ளது.)
- பூஜ்யநேரத்தில் தேசியம் முக்கியதுவம் வாயந்த பிரச்சினைகள் பற்றி விவாதிகப்படும், உறுப்பினர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி கேள்வி எழுப்பலாம்

## தீர்மானங்கள்

தீர்மானங்கள் அவையின் ஒப்புதலுடன் அமைச்சர்கள் (அ) உறுப்பினர்களால் அறிமுகப்படுத்தப்படும்.

**1. விவாத நிறுத்த தீர்மானம்**

✓ மசோதாமீது போதுமான அளவு விவாதம் நடத்தப்பட்டு திருப்தி ஏற்பட்டு அடுத்து வாக்கெடுப்பு கோருவதாகும். இது 4 வகைப்படும்.

a) சாதாரண விவாத நிறுத்த தீர்மானம் = மசோதா (அ) தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றவுடன் வாக்கெடுப்பிற்கு விடுவதாகும்

b) பகுதி விவாத நிறுத்த தீர்மானம் = மசோதா (அ) தீர்மானங்களை பகுதிகளாகப் பிரித்து விவாதம் நடத்தி வாக்கெடுப்பிற்கு விடுவதாகும்

c) கங்காரு விவாத நிறுத்த தீர்மானம் = விவாதம் நடத்தவும், வாக்கெடுப்பிற்கும் மசோதா (அ) தீர்மானத்தின் முக்கிய புதிகளை மட்டும் எடுத்துக்கொண்டு நேரடியாக அடுத்த பகுதிக்கு செல்வதாகும்.

d) கில்லட்டின் = இது பட்ஜெட் விவாதத்தில் அதிகம் பயன்படுத்தப்படும்.,விவாதம் நடத்தி வாக்கெடுப்பு நடத்த போதிய அவகாசம் இல்லாதபோது விவாதம்

நடத்தப்பட்ட மசோதா (அ) தீர்மானத்தின் பகுதியுடன் விவாதம் நடத்தப்படாத பகுதியையும் சேர்த்து வாக்கெடுப்பிற்கு விடுவதாகும்.

2. **<u>உரிமை மீறல் தீர்மானம் - PREVILAGE MOTION</u>**

- ✓ உறுப்பினர்கள் (அ) அமைச்சர்கள் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறினால் அவர்களை கண்டித்து உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.

3. **<u>கவன ஈர்ப்பு தீர்மானம்- CALLING ATTENSION MOTION</u>**

- ✓ **1954**-அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ முக்கிய பிரச்சினைகளில் அமைச்சர்கள் கவனத்தை ஈர்க்க (அ) அது தொடர்பாக அமைச்சரை பதிலளிக்க கோரி உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.

4. **<u>ஒத்திவைப்பு தீர்மானம்-ADJOURECEMENT MOTION</u>**

- ✓ இத்தீர்மானத்தை அறிமுகப்படுத்த 50 உறுப்பினரகளின் ஆதரவு தேவை.
- ✓ ஏற்கனவே நடைபெற்றுவரும் பாராளுமன்றம் இதர அலுவல்களை ஒத்திவைத்து குறிப்பிட்ட பிரச்சினைகளை பற்றி விவாதிக்க கொண்டுவரப்படும் தீர்மானம்.

5. **<u>நம்பிக்கையில்லா தீர்மானம் - NO CONFIDENCE MOTION</u>**

- ✓ இத்தீர்மானம் மக்களவையில் மட்டுமே கொண்டுவர முடியும்
- ✓ இத்தீர்மானத்தை அறிமுகப்படுத்த 50 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.
- ✓ இத்தீர்மானம் ஒரு அமைச்சர் மீதோ (அ) முழு அமைச்சரவை மீதோ கொண்டுவரலாம்.
- ✓ 50%-க்குமேல் (அ) பாதிக்குமேல் உறுப்பினர் ஆதரவு பெற்றால் இத்தீர்மானம் வெற்றி பெறும்.
- ✓ இத்தீர்மானம் வெற்றி பெற்றால் அரசாங்கம் (அ) அமைச்சரவை பதவி விலகும்.
- ✓ ஒரு அமைச்சர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் முழு அமைச்சரவையும் பதவி விலகும் (இதுவே ஒட்டுமொத்த பொறுப்பு (அ) கூட்டுபொறுப்பு ஆகும்)
- ✓ முதன்முதலில் **1963-AUG-22**-ல் ஜ.நேரு அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது.இத்தீர்மானம் தோல்வி அடைந்தது.
- ✓ நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் முதன்முதலில் பதவி விலகிய பிரதமர்
  = விஸ்வநாத் பிரதாப் சிங் - **1989-90** - ஜனதா
- ✓ U.P. CM-ஆக இருந்தார், மண்டல கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்தியவர்.

6. **<u>கண்டனதீர்மானம்- CENSURE MOTION</u>**

- ✓ உறுப்பினர்களால் அமைச்சரவையின் கொள்கை (அ) செயல்பாட்டை கண்டித்து கொண்டுவரப்படுவதாகும். இத்தீர்மானம் நிறைவேறினால் அமைச்சரவை பதவி விலக தேவையில்லை.

7. **<u>வெட்டுத்தீர்மானங்கள்-CUT MOTIONS</u>**

- ✓ மசோதா மீதான நிதி ஒதுக்கீடு செலவின தொகையில் மாற்றம் செய்வதற்காக கொண்டுவரப்படும் தீர்மானம். இது 3 வகைப்படும்.

a) **கொள்கை வெட்டு தீர்மானம்**

மசோதா மீதான செலவின தொகையில் 1 ரூபாய் மட்டும் குறைத்து கொண்டு வரப்படும் தீர்மானம்.

b) **அடையாள வெட்டு தீர்மானம்**

மசோதா மீதான செலவின தொகையில் 100 ரூபாய் மட்டும் குறைத்து கொண்டு வரப்படும் தீர்மானம்.

c) **பொருளாதார வெட்டுதீர்மானம்**

மசோதா மீதான செலவின தொகையில் 1000 ரூபாய் மட்டும் குறைத்து கொண்டு வரப்படும் தீர்மானம்.

## அவைத்தலைவர் - LEADER OF THE HOUSE

- ஒவ்வொரு அவைக்கும் அரசாங்கத்தின் சார்பில் தலைவர் இருப்பார்.
- பிரதமர் எந்த அவையின் உறுப்பினராக உள்ளாரோ அந்த அவையின் அவைத்தலைவர் = பிரதமர்
- மற்றொரு அவைக்கு பிரதமர் - கேபினெட் அமைச்சர் ஒருவரை அவைத்தலைவராக நியமிப்பார்.
- தற்போதைய மக்களவையின் அவைத்தலைவர் =
- தற்போதைய மாநிலங்களவையின் அவைத்தலைவர் = அருண்ஜெட்லி

## எதிர்கட்சி தலைவர் - LEADER OF OPPOSITION PARTY

- ஆளுங்கட்சிக்கு அடுத்த நிலையில் அதிக உறுப்பினர்களை பெற்றுள்ள கட்சி
- எதிர்கட்சி அந்தஸ்த்தை பெற குறைந்தபட்சம் 1/10 பங்கு உறுப்பினர்களை பெற்றிருக்க வேண்டும்.
- 1969-ல் எதிர்கட்சி தலைவர் பதவி அதிகாரப்பூர்மாக அறிவிக்கப்பட்டது.
- 1977-ல் எதிர்கட்சி தலைவருக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- எதிர்கட்சி தலைவர் கேபினெட் அமைச்சருக்கு இணையான அதிகாரம் பெற்றிருப்பார்.
- எதிர்கட்சி தலைவர் பாராளுமன்ற பொதுகணக்கு குழுவின் (PUBLIC ACCOUNTS COMMITTEE) தலைவராக செயல்படுவார்.
- 'எதிர்கால தலைவர் என்பவர் ஒரு மாற்றுபிரதமர்' - LEADER OF THE OPPOSITION PARTY IS THE ALTERNATIVE PRIME MINISTER = சர் ஐவர் ஜென்னிங்ஸ்
- தற்போதைய மக்களவை எதிர்கட்சி தலைவர் = இல்லை
- தற்போதைய மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர் = குலாம்நபிஆசத்

## பாராளுமன்ற குழுக்கள் - PARLIMENTRY COMMITTEES

பாராளுமன்றத்தில் 2 வகையான குழுக்கள் காணப்படுகின்றன.

1. <u>நிலைகுழுக்கள்</u>

   இவை நிரந்தரமானவை. தலைவர் (ம) உறுப்பினர்கள் அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்படுவர் (அ) நியமிக்கப்படுவர்.

2. <u>தற்காலிக குழுக்கள் - ADHOC</u>

   இவை தேவை ஏற்படும்போது ஏற்படுத்தப்படும்.

## பொது கணக்கு குழு = PAC

- 1919-மாண்டெகு - செம்ஸ்போர்டு சட்டப்படி **<u>1921</u>**-ல் ஏற்படுத்தப்பட்டது.
- பாராளுமன்ற குழுக்களில் மிகப்பழைமையானது.
- இக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை = 22 (லோக்சபா-15 + ராஜ்யசபா-7)
- இக்குழுவில் அமைச்சர்கள் இடம்பெற இயலாது.
- **1967**வரை இக்குழுவின் தலைவரை சபாநாயகர் நியமித்தார்
- **1967**-முதல் இக்குழுவின் தலைவர் மக்களவை எதிர்கட்சி தலைவர்
- இக்குழு வரவு செலவுகளையும், CAG அறிக்கைகளையும் ஆராயும்.

## மதிப்பீட்டு குழு - ESTIMATE COMMITTEE

- **<u>1950</u>** ஜான் மார்த்தாய் குழுவின் பரிந்துரைப்படி ஏற்படுத்தப்பட்டது.
- பாராளுமன்ற குழுக்களில் மிகபெரியது.
- உறுப்பினர் எண்ணிக்கை = 30 அனைவரும் லோக்சபா உறுப்பினர்கள்
- ராஜ்யசபா உறுப்பினர் இக்குழுவில் இடம்பெறமுடியாது.
- ராஜ்யசபாவில் உறுப்பினராக உள்ள அமைச்சரும் இக்குழுவில் இடம்பெற முடியாது.
- இக்குழு பட்ஜெட் பற்றி மதிப்பீடு செய்து ஆராயும்.

## பொதுத்துறை நிறுவனங்கள் குழு-COMMITTEE ON PUBLIC UNDERTAKINGS

- **<u>1964</u>**-ல் V.P.கிருஷ்ணமேனன் குழுவின் பரிந்துரைப்படி ஏற்படுத்தப்பட்டது.
- அணிசேராமை என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தியவர்

  = V.P.கிருஷ்ணமேனன்
- **1974**-ல் இக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை 15லிருந்து 22-ஆக உயர்த்தப்பட்டது,
- லோக்சபா - 15, ராஜ்ய சபா - 7

## துறை ரீதியான குழுக்கள்- D.S.COMMITTEES

- பொது துறை நிறுவனங்களின் நிதிநிலை பற்றி இக்குழு ஆராயும்
- விதிகள் குழுவின் (RULES COMMITTEE) பரிந்துரைப்படி **<u>1993</u>**-ல் 17 D.S.C நிலைகுழுக்கள் ஏற்படுத்தப்பட்டது.

- 2004-ல் குழுக்களின் எண்ணிக்கை 17-லிருந்து 24-ஆக உயர்த்தப்பட்டது.
- மொத்தம் = 24 குழுக்கள். அதில் லோக்சபா - 16, ராஜ்யசபா-8
- ஒவ்வொரு குழுவிலும் உறுப்பினர் எண்ணிக்கை 31 (லோக் சபா -20 , ராஜ்யசபா-11)
- மொத்த உறுப்பினர்கள = 24 X 31 =
- இக்குழு பல்வேறு துறைகளின் பணிகள் (ம) செயல்பாடுகளை பற்றி ஆராயும்.

## தர்மம் (அ) அறம் சார்ந்த குழு- ETHICS COMMITTEE

- இரு அவைகளிலும் தனிதனி குழு செயல்படுகிறது.
- ராஜ்யசபாவிலுள்ள குழு **1997**-லிலும், லோக்சபாவில் உள்ள குழு **2000**-திலும் ஏற்படுத்தப்பட்டது. உறுப்பினர் எண்ணிக்கை அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.
- இக்குழு பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை விதிகள் பற்றி ஆராயும்.

## அரசு உறுதியளிக்கும் பரிசிலனை குழு

- COMMITTEE ON GOVERNMENT ASSURANCE
- **1953**-ல் ஏற்படுத்தப்பட்டது.
- இரு அவைகளிலும் தனிதனி குழு செயல்படுகிறது.
- லோக்சபா குழுவில் 15 உறுப்பினர்களும், ராஜ்யசபா குழுவில் 10 உறுப்பினர்கள்
- இக்குழு, அவையில் அவ்வப்போது அமைச்சர்கள் உறுதியளிக்கும் கருத்துக்கள் (அ) திட்டங்களை செயல்படுத்துவது பற்றி ஆராயும்.

## SC/ST நலக்குழு-WELFARE OF SC/ST'S

- உறுப்பினர் எண்ணிக்கை = 30
- இக்குழு தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் (ம) தேசிய பழங்குடியினர் ஆணையம் அளிக்கும் அறிக்கைகள் பற்றி ஆராயும்.

## மகளிருக்கு அதிகாரமளித்தல் குழு

- COMMITTEE ON EMPOWERNMENT OF WOMEN
- **1997**-ல் ஏற்படுத்தப்பட்டது.
- உறுப்பினர் எண்ணிக்கை = **30** (LS=20, RS=10)
- தேசிய மகளிர் ஆணையம் அளிக்கும் அறிக்கைகள் பற்றி ஆராயும்.
- தேசிய மகளிர் ஆணையம் = **31-1-1992**
- T.N.மகளிர் ஆணையம் = **1993**

- மகளிர் ஆணையச்சட்டம் = **1990**

## மசோதா நிலுவை பரிசிலமைப்பு குழு

- **1975**-ல் ஏற்படுத்தப்பட்டது.,LS-15 + RS-10 = 25
- அவையில் மசோதா தீர்மானம் தொடர்பான கருத்துக்கள் (அ) விஷயங்கள அரசியலமைப்பிற்கு உட்பட்டதா என ஆராயும்.